### தமிழ்நாட்டிற்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்க்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகஸ்ட் 27-அன்று அமெரிக்கா பயணம்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

சென்னை, ஆக.17-

தமிழ்நாட்டிற்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 27ஆம் தேதி அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். 17 நாட்கள் பயணத்தின்போது, முன்னணி நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து முதலீடுகள் குறித்து பேசும் முதலமைச்சர் அவர்கள், அமெரிக்க வாழ் தமிழர்களையும் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

தமிழ்நாட்டை, 2030ஆம் ஆண்டுக்குள் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றுவது என்ற இலக்குடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம், ஏற்கனவே, சிங்கப்பூர், ஜப்பான், துபாய், ஸ்வீடன், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதன்மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீடு களும் தமிழ்நாட்டிற்கு கிடைத்தன.

கடந்த ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டா ளர்கள் மாநாட்டில் 6.64 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன்மூலம் சுமார் 27 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தமிழ்நாட்டுக்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வருகிற 27ஆம் தேதி முதல் 17 நாட்கள் அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

சென்னையில் இருந்து 27-ஆம் தேதி அமெரிக்கா செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 28ஆம் தேதி அங்குள்ள சான் பிரான்சிஸ்கோ செல்கிறார். 28ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 2ஆம்தேதி வரை சான் பிரான்சிஸ் கோவில் முக்கிய முன்னணி நிறுவனங்களின் தலைவர்களை, முதலமைச்சர் சந்தித்துப் பேச உள்ளார். ஆகஸ்ட் 29ஆம் தேதி சான் பிரான்சிஸ்கோவில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆகஸ்ட் 31ஆம் தேதி அமெரிக்கவாழ் தமிழ்நாட்டு மக்களை சந்தித்து கலந்துரையாடுகிறார். செப்டம்பர் 2ஆம் தேதி சான்பிரான்சிஸ்கோவிலிருந்து சிக்காகோ செல்லும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், செப்டம்பர் 12ஆம் தேதி வரை அமெரிக்காவில் பார்ச்சூன் 500பட்டியலில் உள்ள சர்வதேச முன்னணி நிறுவனங்களின் முதலீட்டாளர்களை சந்தித்து தொழில் முதலீடுகள் குறித்து பேச உள்ளார்.

செப்டம்பர் 7ஆம் தேதி சிக்காக்கோவில் அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாட உள்ளார். உயர்தர வேலைவாய்ப்பு மற்றும் உயர்தர முதலீடு என்ற முக்கிய குறிக்கோளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அமெரிக்க சுற்றுப்பயணம் அமைய உள்ளதாக தொழில் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில், கனமழை காரணமாக மழைநீர் தேங்குவதை தொடர்ந்து, மழைநீர் வடிகால் அமைப்பது தொடர்பாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கா.பொன்முடி ஆகியோர் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சி.பழனி , விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், நகர மன்ற தலைவர் தமிழ்செல்வி பிரபு, நகர செயலாளர் இரா.சக்கரை, நகர மன்ற துணை தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### அம்மாச்சத்திரம் அருகே நிகழ்ந்த சாலை விபத்தில்

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஆக. 17 -

புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், வடவாளம், தெற்கு செட்டியாப்பட்டி, சொரியன் தெருவைச் சேர்ந்த திருமதி. மாரிக்கண்ணு (வயது 46) க/பெ. ரெங்கசாமி என்பவர் கடந்த 07.08.2024 அன்று சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றபோது புதுக்கோட்டை மாவட்டம், அம்மாச்சத்திரம் அருகே இருசக்கர வாகனம் ஒன்று எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூளைச்சாவு அடைந்து சிகிச்சை பலனின்றி 08.08.2024 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் மூளைச்சாவு ஏற்பட்டதைத் தொடர்ந்து உயிரிழந்த திருமதி. மாரிக்கண்ணு அவர்களின் உடல் உறுப்புகள் அவரது குடும்பத்தினரின் சம்மதத்துடன் தானமாக வழங்கப்பட்டு அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. திருமதி. மாரிக்கண்ணு அவர்களது குடும்பத்தினரின் தியாக உணர்வை தமிழ்நாடு அரசு போற்றுகிறது.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### விடுதலைத் திருநாள் உரையில் – மக்கள் மீது எப்போதும் அன்புகொண்டு

# மிகச் சிறப்பான அறிவிப்புகளைத் தந்துள்ளார் நம் முதல்வர்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**சென்னை, ஆக. 16-**

**78-வது சுதந்திர தின விழாவில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களின் மீது எப்போதும் அன்பு கொண்டவர் என்பதை நிரூபிக்கும் வகையில் பல சிறப்பான அறிவிப்புகளைத் தந்துள்ளார் என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.**

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (15.08.2024) தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

விடுதலை திருநாள் நிகழ்வில், சென்னை கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து உரை நிகழ்த்தி யிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் மீதும், தமிழ்நாட்டு மக்களின் மீதும் எப்போதும் அன்பும், அக்கறையும் கொண்டு நல்ல திட்டங்களை நாள்தோறும் அறிவிக்கக்கூடிய முதல்வர் அவர்கள் இன்றைக்கு மிகச் சிறப்பான அறிவிப்புகளை தன்னுடைய விடுதலை திருநாள் உரையில் இன்றைக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

**வேலைவாய்ப்பு கிடைக்கும்!**
**மக்கள் பயன்பெறும் திட்டம்!**

அந்த உரையில் அவர் அறிவித்திருக்கக்கூடிய மிக முக்கியமான அறிவிப்புக்களில் ஒன்று “முதல்வர் மருந்தகம்” என்கின்ற பெயரில் தமிழ்நாட்டில் மருந்தாளுநர்கள் பயன்பெறத்தக்க அளவில் கூட்டுறவு அமைப்புகள் பயன்பெறத்தக்க அளவில் 1000 மருந்தகங்கள் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக திறக்கப்படும். குறிப்பாக, நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் போன்று இருக்கக்கூடிய நோய்களால் பாதிக்கப்படக்கூடிய பொதுமக்கள் அவற்றிற்கு உரிய மருந்துகளை பெறுவதில் அதிகளவில் அவர்களுக்கு பணச் செலவு ஏற்படுகிறது என்பதை கருத்தில் கொண்டு, அவர்களின் சுமையைக் குறைக்கக் கூடிய வகையில், மிகக்குறைந்த விலையில், அந்த மருந்துகள் பொதுப்பெயர் வகையில் அதாவது ஜென்ரிக் மருந்துகள் என்கின்ற வகையில் பிராண்டடாக இல்லாமல் ஜென்ரிக் மருந்துகள் என்கின்ற வகையில் அந்த மருந்துகள் குறைந்த விலையில் கிடைப்பதில் உறுதி செய்யக் கூடிய வகையில் இந்த மருந்தகங்கள் அமைப்பதற்கு அவர்கள் இன்றைக்கு அறிவிப்பினை செய்திருக்கிறார்கள். இது பொது மக்களுக்குப் பயன்படக்கூடிய அதேவேளையில் பலருக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கக்கூடிய ஒரு மிகச்சிறந்த அறிவிப்பாக இந்த அறிவிப்பு அமைந்திருக்கிறது.

**முன்னாள் படை**
**வீரர்களுக்கான திட்டம்!**

அதுபோல, “முதல்வரின் காக்கும் கரங்கள்” திட்டத்தின் அடிப்படையில் தாய் நாட்டிற்காக தங்களுடைய இளம் வயது முழுவதும் ராணுவச் சேவையில் கழித்து நம்முடைய நாட்டை காக்கக் கூடிய பணியில் ஈடுபட்டிருக்கக்கூடிய முன்னாள் படைவீரர்களின் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்யக்கூடிய வகையில், “முதல்வரின் காக்கும் கரங்கள்” என்கின்ற ஒரு புதிய திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கி



றார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையில், முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்குவதற்காக ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகள் மூலமாக கடனுதவி பெறுவதற்கு வழிவகை செய்யப்படும். இந்தக் கடன் தொகையில் 30% அதற்கு மூலதன மானியமாக அதற்கு வழங்கப்படும். 3 சதவீத வட்டி மானியமாக வழங்கப்படும் என்கின்ற சிறப்பான அறிவிப்பையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் தொழிலை தொடங்குவதற்கு நம்முடைய முன்னாள் படை வீரர்களுக்கு உரிய திறன் பயிற்சி வழங்குவதற்கும், அவர்களுக்கான மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவதற்கும், உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், 400 முன்னாள் ராணுவ படைவீரர்கள் பயன்பெறத்தக்க வகையில், 400 கோடி ரூபாய் மதிப்பில், ஏறத்தாழ 120 கோடி ரூபாய் மூலதன மானியம்; அதைப்போல, மூன்று விழுக்காடு வட்டி மானியம் சேர்த்து இதற்கு வழங்கப்படும் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**தியாகிகளின் ஓய்வூதியம் உயர்வு!**

அதுபோல, தியாகிகளின் ஓய்வூதியம் வழங்குவதில் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தற்போது வழங்கிவரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூபாய் 20 ஆயிரத்திலிருந்து 21ஆயிரம் ரூபாயாக வழங்கக்கூடிய சிறப்பான அறிவிப்பு.

விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்பங்களுக்கு வழங்கக்கூடிய மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் 11 ஆயிரம் ரூபாயிலிருந்து 11 ஆயிரத்து 500 ரூபாய்.

வீரபாண்டிய கட்டபொம்மன், சிவகங்கை மருது சகோதரர்கள், ராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி போன்ற மிகப்பெரிய விடுதலைப் போராட்ட வீரர்களின் வழித்தோன்றலுக்கு வழங்கக்கூடிய மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரத்து 500 ரூபாயாக வழங்கப்படும் என்பதை அறிவித்திருக்கிறார்கள்.

அண்மையில் நடந்த கேரள மாநில பேரழிவு நாமெல்லாம் அறிந்ததே. அதையொட்டி தமிழ்நாட்டினுடைய மலைப் பகுதிகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள், கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகள் ஆகிய மலை நிலப்பகுதிகளில் இயற்கை இடர்பாடுகள் குறித்த ஒரு முழுமையான ஆய்வுகளை செய்வதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மிக முக்கியமான அறிவிப்பினை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, மிகச் சிறப்பான அறிவிப்புகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய இன்றைய விடுதலைத் திருநாள் உரையில் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களிடத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**ஆளுநரின் தேநீர் விருந்தில்**
**அரசின் சார்பில் பங்கேற்போம்!**

**கேள்வி :** *ஆளுநர் தேநீர் விருந்தை பொறுத்த அளவில், திராவிடர் கழகம் புறக்கணிப்பதாக தெரிவித்தது. அரசினுடைய நிலைப்பாடு என்னவாக இருக்கும்?*

**நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு :** அரசின் சார்பில் நம்முடைய ஆளுநர் அவர்கள் தேநீர் விருந்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்களுக்கு எல்லாம் ஆளுநர் அவர்கள் அழைப்பு விடுத்தி ருக்கிறார்கள். அரசின் சார்பில், ஆளுநர் அவர்களுடைய அழைப்பினை ஏற்று அந்த விருந்தில் நாங்கள் கலந்து கொள்வதாக முடிவு செய்திருக்கிறோம். அந்த விருந்தில் பங்கேற்கிறோம்.

**கேள்வி :** *தமிழகத்தில் போதைப் பொருள் புழக்கம் அதிகமாக இருக்கிறது என்று ஆளுநர் அவர்களின் அறிக்கையில் சொல்லியிருக்கிறார். இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? தொடர்ந்து அவர் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை சொல்லிக் கொண்டிருக்கிறார். அது பற்றி....*

**அமைச்சர் தங்கம் தென்னரசு :** ஆளுநரின் இத்தகைய நிலைப்பாடுகளை குறித்து அதற்கான விளக்கங்கள் அவ்வப்போது அமைச்சர்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் கருத்துக்கள் என்பது வேறு; அரசினுடைய நிலைப்பாடு என்பது வேறு.

ஆளுநர் அவர்களுடைய இத்தகைய கருத்தியல் சார்ந்திருக்கக்கூடிய விஷயங்களில் மாறுபட்ட கருத்துக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது. ஆனால், ஆளுநர் என்கின்ற அந்த பதவியின் மீது, அந்தப் பொறுப்பின் மீது முதலமைச்சர் அவர்கள் பெரும் மதிப்பு கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசினுடைய நிலைப்பாடு என்னவென்றால், அவருடைய பதவிக்கு, பொறுப்பிற்கு மதிப்பளிக்கக்கூடிய வகையில் ஆளுநர் கொடுத்திருக்கின்ற இந்த அழைப்பினை ஏற்று இந்த விடுதலைத் திருநாள் விழாவில் அவர் அழைத்திருக்கக்கூடிய தேநீர் விருந்தில் நம்முடைய அமைச்சர் பெருமக்கள் அதில் பங்கேற்கிறார்கள்.

**ஆளுநர் என்கிற**
**பொறுப்புக்கு மதிப்பளிக்கிறோம்!**

**கேள்வி :** *ஆளுநர் அவர்களுடைய பதவிக் காலம் முடிந்தும், ஆளுநர் நீட்டிக்கிறார் என்பதைத்தான் கூட்டணிக் கட்சினர் சொல்கிறார்கள். அதையெல்லாம் கடந்துதானே தேநீர் விருந்தில் கலந்து கொள்ளவிருக்கிறீர்கள்.*

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** நான் உங்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், நான் ஏற்கனவே சொன்னதுபோல, அரசியல் கருத்துக்கள், அரசியல் நிலைப்பாடுகள் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கக்கூடிய கருத்தியலில் மாறுபாடுகள் இருக்கலாம், மாச்சரியங்கள் இருக்கலாம். ஆனால் ஆளுநர் பொறுப்பு என்கின்ற வகையில், ஆளுநர் பதவி என்பது ஒரு Institution. அந்த Institutionக்கு உரிய மரியாதையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்போதும் அளிக்கிறார். அவர் ஒருபோதும் அளிக்க தவறியதில்லை. எனவே, அந்த கோட்பாடுகளின் அடிப்படையில், ஆளுநர் அவர்களுடைய அழைப்பினை நாங்கள் ஏற்று அதில் கலந்து கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலை

# தமிழ்நாடு காத்தாடி திருவிழாவில் 250 வெளிநாட்டினர் பங்கேற்பு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

*சென்னை, ஆக.17-*

*கிழக்கு கடற்கரை சாலை திருவிடந்தை கடற்கரையில் நடைபெற்ற 3வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.*

*செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு கடற்கரை சாலை திருவிடந்தை கடற்கரையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனியாருடன் இணைந்து 15.08.2024 அன்று தொடங்கி 18.08.2024 வரை நடைபெற உள்ள 3வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.*

*பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்தி ரன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:-*

*முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலாமாக உருவாக்கி வருகின்றார். குறிப்பாக சுற்றுலாத்துறையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டியை சிறப்பாக நடத்தி உலக சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்ததன் காரணமாக உலகின் பல்வேறு துறைகளை சார்ந்தவர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டு வருகின்றார்கள்.*



*தொடர்ந்து சுற்றுலாத் துறையின் மூலமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா, மலைவாசஸ்தலங்களில் கோடைவிழாக்கள், பொள்ளாச்சியில் பலூன் திருவிழா, சென்னை தீவுத்திடலில் வெளிநாடுகள், வெளிமாநிலங்களைச் சேர்ந்த கைவினை கலைஞர்கள், கைத்தறியாளர்கள் பங்கேற்ற சென்னை விழா என சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையிலான நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.*

*சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலான தொடர் நடவடிக்கைகளால் கொரோனாவிற்கு பிறகு 2021-ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 11,74,899-ஆகவும் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு தற்போது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 6,45,296 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.*

*இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021-ல் 11,53,36,719-ஆக இருந்து 2022-ல் 21,85,84,846 ஆகவும், 2023-ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 15,49,10,708 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.*

*தொடர்ந்து மூன்றாம் ஆண்டாக தமிழ்நாடு சர்வதேச காத்தாடி விழா இந்த ஆண்டு 2024 கிழக்கு கடற்கரை சாலை திருவிடந்தை கடற்கரையில் இன்று தொடங்கி 4 நாட்கள் நடத்தப்பட உள்ளது. பிரான்ஸ், ஜெர்மனி, தாய்லாந்து, மலேசியா, சுவிட்சர்லாந்து, வியட்நாம் மற்றும் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் சர்வதேச காத்தாடி அணிகளைச் சேர்ந்த 40 பட்டம் விடும் வீரர்கள் கலந்து கொண்டு, டால்பின்கள், குதிரை, பூனை, சுறாமீன், நீலத்திமிங்கலம், தங்க மீன்கள், பாம்பு, கரடி, ஆக்டோபஸ், கொரில்லா உள்ளிட்ட வெவ்வேறு வகையான 250க்கும் மேற்பட்ட காத்தாடிகளை பொதுமக்களுக்கு காட்சி படுத்த உள்ளனர்.*

*இந்த காத்தாடி திருவிழாவில் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு சிறப்பை விளக்கும் வகையில் சிறப்பு பட்டத்தை தமிழக குழுவினர் பறக்க விடுவார்கள். ‘உங்கள் வாழ்க்கையை வண்ணமாக்குங்கள்’ என்பதே இந்த ஆண்டு காத்தாடி திருவிழாவின் மைய பொருள் ஆகும்.*

*“கடந்தாண்டு 150 காத்தாடிகள் பங்கேற்றன. இந்தாண்டு பட்டம் விடுவோர் கூடுதலாக பங்கேற்பதால் அவர்கள் பறக்க விட உள்ள 250 காத்தாடிகளுக்கு அதிக இடம் தேவைப் படுவதால், கோவளத்திற்கு அருகிலுள்ள கடற்கரைப் பகுதியில் இந்த விழா நடைபெறுகின்றது.*



செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு கடற்கரை சாலை திருவிடந்தை கடற்கரையில் நடைபெற்ற 3வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன். சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (15.8.2024) துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ச. அருண்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.